சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.01.2026 SC.65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயராகவன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | கணேசன் | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW9 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் 2022 மார்ச் 2ம் தேதி நானும், பின்னத்தேவர் என்பவரும் ஆங்கூர்பாளையம் ரோட்டில் கிழக்கு பக்கம் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது சிவாஜி மகன் ஸ்டாலின் என்பவரை போலிசார் அழைத்து வந்தார்கள். அவர்கள் எங்களையும் அரவிந்த் வீட்டிற்கு கிழக்குப்பக்கம் உள்ள பேச்சி வீட்டிற்கு முன்னால் இருந்த அருவாளை எங்கள் முன்னர் ஸ்டாலின் எடுத்துக்கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அருவாள் தான் எங்கள் முன்பு கைப்பற்றப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆகும். அதேபோல் அருவாளை கைப்பற்றி தயார் செய்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.6 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நானும் எனது மாமா பின்னத்தேவரும் ஆங்கூர்பாளையம் ரோட்டில் கிழக்கு பக்கம் பேசி கொண்டிருக்கவில்லை என்றும், காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு நின்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் முன்பு எதிரி ஸ்டாலின் கைது செய்யப்படவில்லை என்றும், அவர் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், எங்கள் முன்பு சான்று பொருள் அருவாள் கைப்பற்றபடவில்லை என்றும், காவல்

துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்னிடமும் பின்ன்தேவரிடமும் காவல்நிலையத்தில் வைத்து தான் போலிசார் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் போட்டதால் தான் அருவாளை நான் அடையாளம் காட்ட இயலவில்லை என்றால் நான்கு வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் எனக்கு ஞாபகம் இல்லை.

(ஓம்.) M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்